# தேயிலைத்தொழிற்சாலை ஊழியர்களின் வேலை திருப்தியில் தொழில் சுகாதார மற்றும் பாதுகாப்புக் காரணிகளின் தாக்கம்

வ. தர்மதாசன் மற்றும் இரா. நிர்மலாதேவி

*முகாமைத்துவக் கற்கைகள் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்*

***முதன்மைச் சொற்கள்:*** *தேயிலைத்தொழிற்சாலை; ஊழியர்கள்; வேலை திருப்தி; தொழில; சுகாதாரம் மற்றும்; பாதுகாப்பு.*

## அறிமுகம்

இலங்கைப் பொருளாதாரத்தின் அந்நிய செலாவணியினை ஈட்டித்தரும் துறைகளில் முக்கிய பங்கு வகிக்கும் துறையாக தேயிலைப் பெருந்தோட்டத்துறை காணப்படுகின்றது. இலங்கையின், பல்வேறு பகுதிகளில் தேயிலைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டாலும், நுவரெலியா மாவட்டம் பிரதான இடம் வகிக்கின்றது

பிரைஸ் (Price, 2001) என்பவர் ஊழியர்கள் தம்முடைய வேலையினை மகிழ்ச்சியுடன் புரிவதனை தொழில் திருப்தி எனவும், தொழில் திருப்தியானது ஒரு ஊழியர் தொழிலில் முன்னோக்கிச் செல்வதற்கு சிறந்த திசைமுகப்படுத்தலாக காணப்படுகின்றது எனவும் குறிப்பிடுகின்றார். பிலகஸ்போலர் மற்றும் ஏனையோர் (Flaspoler et.al., 2004) ஐரோப்பிய நாடுகளையும் மற்றும் ஐக்கிய அமெரிக்காவினையும் மையப்படுத்தி மேற்கொண்ட ஆய்வின் மூலம் தொழில் செய்யும் இடத்தில் தோற்றுவிக்கப்படும் பெரும் சத்தம், அதிர்கள், வெப்பம், இயந்திரம் வேலை செயற்பாடுகள், என்பனவற்றால் ஏற்படும் இடர்களினால் ஊழியர்கள் மன அழுத்தம் மற்றும் தொழில் திருப்தின்மைக்கு ஆளாகின்றனர் என கண்டுள்ளனர். அசோக்குமார் (Ashokkumar, 2003) என்பவர் நேரடி விசாரணை முறையை கையாண்டு இந்தியாவில் பொறியியல் தொழிற்சாலைகளில் தொழிற்புரியும் ஊழியர்கள் மத்தியல் மேற்கொண்ட தனது ஆய்வு மூலம் சுகாதாரத்திற்கும் தொழில் திருப்திக்குமிடையல் நேர்கணிய தொடர்பு காணப்படுகிறது என்ற முடிவினைப் பெற்றார்.

மேலும் இலங்கையின் தேயிலைத்தோட்டங்களில் கள மட்டத்தில் தொழில்புரியும் தொழிலாளர்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகள் (EFC, 1998; Shunsuke, 2001; and Mackintosh, 2010)

ஊழியர்கள் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் பாரிய இடரினை எதிர்நோக்குவதோடு, பொது சுகாதார பிரச்சினைகள், வறுமை மற்றும் அடிப்படை வசதிகளின்மை என்பனவற்றிற்கும், வேலைசூழலில் குறிப்பாக பெண்கள் தொழில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கிறனர் எனக்குறிப்பிடுகின்றன.

இலங்கையின் பெருந்தோட்டத்துறையில் தொழில்பரியும் கள ஊழியர்களின் தொழில்சார்ந்த சுகாதார மற்றும் பாதுகாப்பு தொடர்பாக பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், இங்குள்ள தேயிலைத் தொழிற்சாலைகளில் தொழில்புரியும் ஊழியர்கள் பற்றியும், அவர்களது தொழில்சார்ந்த சுகாதார மற்றும் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாகவும், அவை ஊழியர்களின் தொழில் திருப்தியில் செலுத்தக்கூடிய தாக்கங்கள் பற்றியும் இதுவரைகாலயில் புள்ளிவிபர நுட்பங்களைப் பயன்படுத்தி எவ்வித ஆய்வுகளும் மேற்கொள்ளப்படாமை முக்கிய ஆய்வு இடைவெளியாக அடையாளம் காணப்பட்டுள்ளது. எனவே, இவ்வாய்வானது தேயிலைத் தொழிற்சாலை ஊழியர்களின் வேலை திருப்தியில் தொழிற் சுகாதார மற்றும் பாதுகாப்புக் காரணிகள் கொண்டிருக்கும் தாக்கத்தினை பரிசோதிப்பதில் கவனஞ்செலுத்துகின்றது.

**நோக்கம்**

இவ்வாய்வின் பிரதான நோக்கமானது நுவரெலிய மாவட்டத்தின் நானுஓயா பிரதேசத்திலுள்ள தேயிலை தொழிற்சாலைகளில் தொழில்புரியும் கீழ்மட்ட ஊழியர்களின் தொழில் திருப்தியில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு காரணிகள் கொண்டிருக்கும் தாக்கத்தினை மதிப்படுதலாகும்.

**கருதுகோள்:** $H_0$: தேயிலை தொழிற்சாலைகளில் தொழில் புரியும் கீழ்மட்ட ஊழியர்களின் தொழில் திருப்தியில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு காரணிகள் செல்வாக்கு செலுத்தவில்லை; $H_1$: தேயிலை தொழிற்சாலைகளில் தொழில் புரியும் கீழ்மட்ட ஊழியர்களின் தொழில் திருப்தியில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு காரணிகள் செல்வாக்கு செலுத்கின்றன என்பதாகும்.

## Ma;T Kiwapay;

இவ்வாய்வானது 2013 ஆம் ஆண்டு நுவரெலிய மாவட்டத்தின் நானுஓய பிரதேசத்திலுள்ள தேயிலைத்தோட்டங்களை முகாமைச்செய்யும் தனியார் கம்பெனியின் கீழ் காணப்படும் தோடட்டங்களுக்குரிய 5 தேயிலைத் தொழிற்சாலைகளிலிருந்து நோக்க மாதிரியடிப்படையில் தெரிவுச்செய்யப்பட்ட இரண்டு தொழிற்சாலைகளில் தொழிற்பரியும் 257 தொழிலாளிகளிடமிருந்து படையாக்கப்பட்ட எழுமாற்று மாதிரியெடுப்பு முறை மூலம் விகிதாசார ரீதியாக செய்யப்பட்ட 52 மாதிரிகளிடமிருந்து பெறப்பட்ட முதலாம்நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், இவ்வாய்வானது ஹேர்ஸ் பேக்கரின் இருகாரணி கோட்பாட்டினை(தேவராஜா,2002) அடிப்படையாகக்கொண்டுள்ளது. இக்கோட்டிற்கிணங்க, இவ்வாய்வு ஒன்றிணைக்கப்பட்ட உடற்சுகாதாரம் மற்றும் உளசுகாதாரம் என்பனவற்றை சுகாதாரக் காரணியாகவும் ஒன்றினைக்கப்பட்ட இயந்திரங்களை கையாளல், அவசர மற்றும் அபாயநிலைமைகளில் வெளியேறும் வசதிகள், வேலை செய்யும் சூழல், பாதுகாப்பான மின்சார வழங்கல்கள் தொடர்பான தரவுகளை பாதுகாப்புக்காரணியாகவும் கையாண்டுள்ளது தொழில் பாதுகாப்பு என்பது வேலைச்சூழலில் ஏற்படும் காயங்கள் மற்றும் விபத்துக்கள் என்பவற்றிலிருந்து ஊழியர் பாதுகாக்கப்படும் நிலையாகும் (Mondy, 2009) ஊழிய சுகாதாரம் என்பது வேளைத்தளத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தொழிலாளர்கள் உளரீதியாகவும், உடல்ரீதியாகவும் நலமாக வாழ்வதனை குறிக்கும். (தருமதாசன், 2008). இதனடிப்படையில் இவ்வாய்வானது, சுகாதாரக் காரணியையும் பாதுகாப்புக் காரணியையும் விளக்கமாறியாகவும் தொழில் திருப்தியை சாரந்த மாறியாகவும் பயன்படுத்துகின்றது.

இவ்வாய்வின் ஆய்வுநுட்பமாக எளிய பின்மடங்கு பிற்செலவு மாதிரியுரு பயன்படுத்தப்பட்டுள்து. இதனடிப்படையில் இவ்வாய்விற்கான பிற்செலவு மாதிரியுரு பின்வருமாறு தரப்படுகிறது.

$$\text{JB} = \beta_0 + \beta_1 HEA + \beta_2 SAF + u_i \quad \ldots\ldots\ldots\ldots\ldots\ldots\ldots\ldots\ldots(1)$$

இங்கு, $\beta_0, \beta_1, \beta_2$ என்பன பிற்செலவு மாறிகளுக்கான குணகங்களாகும். JS= தொழில் திருப்தி, HEA = சுகாதாரம், SAF = பாதுகாப்பு ஆகவும் $u_i$ வழு உறுப்பாகவும் காணப்படுகின்றது.

மேலும், விபரணப்புள்ளிவிபர நுட்பங்களும் தரவுகளின் பகுப்பாவுகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன.

## பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

பிற்செலவு ஆய்வின் பெறுபேறுகள் பின்வரும் முடிவுகளை வெளிப்படுத்துகின்றன.

$$JS = 2.656 + 0.621\text{HEA} + 0.793\text{SAF}\ldots\ldots\ldots\ldots\ldots\ldots\ldots(2)$$

P - பெறுமதி (.001) (.004)

மேலே, தரப்பட்டுள்ள மதிப்பிடப்பட்ட சமன்பாட்டின் அடிப்படையில் நோக்குமிடத்து, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு காரணிகள் 5% மட்டத்தில் புள்ளிவிபரரீதியாக பொருளுண்மைமிக்கதாகவும் நேரக்கணியமாகவும் காணப்படுகின்றன. இதன்படி, தேயிலை தொழிற்சாலைகளில் தொழிற்புரியும் கீழ்மட்ட ஊழியர்களின் சுகாதார காரணிகள் தொழில் திருப்தியை அதிகரிப்தோடு, சுகாதார வசதி ஒரு அலகால் அதிகரிக்கும்போது அவர்களின் தொழிற்திருப்தியானது 0.621 அலகுகளால் அதிகரிக்கின்றது எனலாம். அதேபோல், பாதுகாப்பு காரணிகளும் தொழில் திருப்தியை அதிகரிப்தோடு பாதுகாப்பு மேம்பாடு ஒரு அலகால் அதிகரிக்கும்போது அவர்களின் தொழில் திருப்தியானது 0.793 அலகுகளால் அதிகரிக்கின்றது எனலாம்.

இவவாய்வின் மேலதிக பகுப்பாய்வுகள், மூலம் (பின்னிணைப்பு அ) ஊழியர்களின் தனிப்பட்ட பண்புகள் தொழில் திருப்திமீது பாரியளவு தாக்கமெதனையும் செலுத்தவில்லை என எடுத்துரைக்கின்றன. எனினும், வயதுரீதியான பகுப்பாய்வினை நோக்குமிடத்து, 55 வயதிற்கு மேற்பட்டோர் அனைவருமே தொழிலில் திருப்தியற்றநிலையில் காணப்படுகின்றனர். அதேவேளை, தொழிற்பிரிவுகளின் அடிப்படையில் நோக்கும்போது அரைத்தல் மற்றும் காயவைத்தல பிரிவுகளில் தொழில் பிரிவோர் அனைவரும் தமது தொழிலில் திருப்தியற்றவர்களாகவே காணப்படுகின்றனர். பால்ரீதியாக ஒப்பிடும் போது, ஆண்களை விடவும்

பெண்கள் அதிகளவில் தொழில் திருப்தியற்றவர்களாக காணப்படுகின்றனர்.

## முடிவுரையும் விதந்துரைகளும்

இவ்வாய்வு தேயிலை தொழிற்சாலைகளில் தொழிற்புரியும் கீழ்மட்ட ஊழியர்களின் தொழில் திருப்திக்கும் அவர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு காரணிகளுக்குமிடையயல் பொருளுன்மைமிக்க நேர்கணிய தொடர்பு இருப்பதனை இனங்கண்டுள்ளது. அத்தோடு தேயிலைத் தொழிற்சாலை ஊழியர்களின் தனிப்பட்டபண்புகள் தொழில் திருப்தியில் தாக்கம் செலுத்தவில்லை எனவும்; உயர் வயதுபிரிவுக்குட்பட்டோர், அரைத்தல் மற்றும் காயவைத்தல் பிரிவுகளில் தொழில் புரிவோர் மற்றும் பெண் ஊழியரகள் ஆகியோர் அதிகளவில் தொழில் திருப்தியற்றவர்களாக காணப்படுகின்றனர் என்ற முடிவினை வெளிப்படுத்துகினறது.

இவ்வாய்வானது, ஊழியர்களுக்கான சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றினை ஏற்படுத்த கூடியவகையில் தேயிலைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கான தொழிற்கொள்கைகள் மீளுருவாக்கப்படல்; ஊழியர்கள் அதிகளவு அதிருப்தியினை கொண்டிருக்கும் செயற்பாடுகள் இனக்காணப்பட்டு அவற்றை மேலும் அபிவிருத்திச்செயதல், ஊழியர்களை காலத்திற்கு காலம் வெவ்வேறு தொழில் பிரிவுகளுக்கு மாற்றம் செய்வதன் மூலம் ஊழியர்களின் திருப்திநிலையினை மேம்பபடுத்தல் தொழில் சுகாதாரம் பாதுபாப்பு தொடர்பாக தேவையான பயிற்சிகளை வழங்குவதல் என்பன மேற்கொள்ளப்படல் வேண்டுமென சிபார்சு செய்கினறது.

### *உசாத்துணை*


Ashokkumar, M and Bhati, Parul P. (2003) Provision of Welfare Under Factories Act & Its Impact On Employee Satisfaction. Blue Ocean Publication. Access in: www.borjournals.com

Mackintosh, Craig (2010) Letters from Sri Lanka – Sarvodaya and the Tea Plantation Challenge. http://www.permaculturenews.org/2010/ 08/26/

Shunsuke, K (2001), “Tea Estate Plantation Community in Nuwara – Eliya District of Sri Lanka (An Inductory Overview of Social Issues and Poverty among Residents Living Under the Conventional Plantation System)” Yokohama Journal of Social Science, 15 (16).

Wayne, M. R ( 2009) Human Resource Management (Tenth Edition), Dorling Kindersley (India) Pvt Ltd.

தர்மதாசன், வடிவேல்முருகன். (2008) மனிதவளமுகாமைத்துவம் பாகம் II, செல்வி வெளியீட்டகம், கண்டி.